செய்தி வெளியீடு எண் : 1134 நாள் : 03.08.2024

<u>செய்தி வெளியீடு</u>

## அருந்ததியினருக்கான 3 சதவிகித உள் இட ஒதுக்கீடு சட்டம் செல்லும் என்று உச்சநீதிமன்றம் உறுதி செய்து தீர்ப்பு அளித்திருப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு அருந்ததியினர் சமூகத்தைச் சேர்ந்த அமைப்புகள், இயக்கங்கள், மற்றும் சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களை இன்று (3.8.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக அரசால் 2009–ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில் அறிமுகம் செய்து நிறைவேற்றப்பட்ட அருந்ததியினருக்கான 3 சதவிகித உள் இட ஒதுக்கீடு சட்டம் செல்லும் என்று உச்சநீதிமன்றம் உறுதி செய்து தீர்ப்பு அளித்திருப்பது திராவிட மாடல் அரசிற்கு கிடைத்த வெற்றி என்று பாராட்டி, வாழ்த்து தெரிவித்து, அருந்ததியினர் சமூகத்தின் சார்பில் ஆதித்தமிழர் பேரவை தலைவர் திரு. அதியமான், திராவிடர் தமிழர் கட்சி தலைவர் திரு. வெண்மணி, தமிழ் புலிகள் கட்சியின் திரு. நாகை திருவள்ளுவன், ஆதித்தமிழர் கட்சியின் திரு. ஜக்கையன், தமிழ்நாடு சாக்கிய அருந்த்தியர் சங்கத்தின் திரு. எழுத்தாளர் மதிவண்ணன், ஆதிதமிழர் ஜனநாயக பேரவையின் திரு. பௌத்தன், ஆதித்தமிழர் மக்கள் கட்சியின் திரு.எஸ்.டி. கல்யாணசுந்தரம், கொங்கு விடுதலை புலிகள் கட்சியின் திரு. விஸ்வநாதன், திராவிட தமிழர் எழுச்சி கழகத்தின் திரு. தமிழ்மணி, சமூக நீதி மக்கள் கட்சியின் திரு. வடிவேல் ராமன், ஜெய் பீம் மக்கள் கட்சியின் திரு. அறிவழகன், விடுதலை வேங்கைகள் கட்சியின் திரு. தமிழன்பன், திராவிட எழுச்சி பேரவையின் திரு. சக்திவேந்தன், திராவிடர் புரட்சிக் கழகத்தின் திரு. சௌந்தர், தமிழ்நாடு அருந்ததியர் சங்கத்தின் திரு. இராசேகர், அருந்ததி கட்சியின் திரு. புருஷோத்தமன், தலித் விடுதலை இயக்கத்தின் திரு. சசிகுமார் கிச்சா, தமிழ் சிறுத்தைகள் கட்சியின் திரு. அகத்தியன், அருந்ததியர் சங்கத்தின் திரு. சுப்பிரமணி, அனைத்து அருந்ததியர் மக்கள் நல பேரவையின் திரு. துரை பாலகுரு, சமநீதி புலிகள் கட்சியின் திரு. வெள்ளை பாண்டியன், தேசிய திராவிட கட்சியின் திரு.டி.கே. முருகேசன், அருந்ததியர் மக்கள் இயக்கத்தின் திரு. பிரதாபன், ரீடு தொண்டு நிறுவனத்தின் திரு. கருப்புசாமி, அருந்ததியர் சமூகம் மடத்தின் திரு. செல்வகுமார், அருந்ததியர் பெண்கள் இயக்கம் மற்றும் தொண்டு நிறுவனத்தின் திருமதி அலமேலு, மாவீரன் பொல்லான் வாரிசுதாரர்கள் திரு. ராஜன் முருகன், அருந்ததியர் விடுதலை முன்னணி, அறம் மக்கள் கட்சி, தலித் விடுதலை கட்சி உள்ளிட்ட 45 அருந்ததியினர் அமைப்புகள், இயக்கங்கள், மற்றும் சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் நேரில் சந்தித்து தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு, மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.எம்.மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.ஆ. ராசா மற்றும் திரு. அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. தாயகம் கவி மற்றும் திரு. இ. பரந்தாமன், முன்னாள்

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.எஸ். பாரதி, கழக இணை அமைப்புச் செயலாளர் திரு. அன்பகம் கலை ஆகியோர் உடனிருந்தனர்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**


அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu